பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல்லகராதி

டாக்டர் ச. மல்லிராஜா M.A.(Eng.), M.A.(Tamil), Ph.D.,

மொழிபெயர்ப்பு அலுவலர்

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல்லகராதி

(ஆங்கிலம் - தமிழ்)

டாக்டர் ச. மல்லிராஜா M.A.(Eng.), M.A.(Tamil), Ph.D.,
மொழிபெயர்ப்பு அலுவலர்

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

முதல் பதிப்பு : 2003

© சென்னைப் பல்கலைக்கழகம்

விலை : ரூ. 145/-

அச்சிட்டோர் :
கீதா பிரஸ், சென்னை - 600 023.

அணிந்துரை

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் நிகண்டுகளில் காலத்தால் மிகவும் தொன்மையானது திவாகரரால் இயற்றப்பட்ட திவாகரம் என்னும் நிகண்டாகும். இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஒரு சொல்லுக்குப் பல பொருளையும் பல பொருளுக்கு ஒரு சொல்லையும் தரும் திவாகரம் போன்ற நிகண்டுகள் கற்போர் மனத்தில் எளிமையாக இருத்திக்கொள்ளும் வகையில் செய்யுளால் இயற்றப்பட்டன. இவ்வகை நிகண்டுகள் 24-க்கும் மேற்பட்டன. இந்நிகண்டுகள் பல்வேறு காலங்களில் பல்வேறு மொழிநூல் புலமையாளர்களால் நம்மொழி வளத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்பட்டன. இதனால் நம் தமிழ்மொழி மேலும் சொல்வளம் பெற்று ஏற்றம் அடைந்தது.

மேலைநாட்டப் பாதிரிமார்கள், செய்யுளில் அமைந்த இந்நிகண்டு களை அடிப்படையாக வைத்துக்கொண்டு அகராதிகளை உரைநடையில் உருவாக்கினர். இவ்வமைப்பில் முதன்முதலில் தமிழில் 1782-இல் வீரமாமுனிவர் சதுரகராதியை உருவாக்கினார். இம்முயற்சிக்குப் பிறகு தமிழில் ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி முதலியன உருவாயின.

இந்தியத் துணைக்கண்டம் குடியரசு ஆட்சிக்குப் பிறகு மொழிவழி மாநிலங்களாக உருவாகின. இம்மொழிவழி மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சிமொழிகளாகக் கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டில் 27-12-1656 இல் தமிழகச் சட்டமன்றத்தில் இவ்வகையான 'ஆட்சிமொழிச் சட்டம்' ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதன் பிறகு அரசின் ஆணைகள், கடிதங்கள், குறிப்புகள் ஆகியன தமிழ்மொழி வழி நடத்தப்பட்டன. இதற்கு வழிகாட்டியாக அலுவலர்களுக்கு, 'ஆட்சிச் சொல் அகராதி' உருவாக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து துறைகள் தோறும் அகராதிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக மருத்துவம், வேளாண்மை, தகவல் தொழில் நுட்பம், கணிப்பொறி, சட்டத்துறை, மானிடவியல் ஆகிய துறைகளுக்குத் தனித்தனியே அகராதிகள் வெளியிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகப் பணியாளர்கள் தமிழில் அலுவல்கோப்புகளை எழுதிடல் வேண்டும் என்கிற வேட்கையின் விளைகாக உருவானதுதான் 'பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல்லகராதி' என்னும் இந்நூலாகும். இது தமிழ்நாட்டில் உள்ள பல பல்கலைக்கழக அலுவல் பணியாளர்களுக்கும் உதவும் முதன்மை நூலாகவும் வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வகராதி தனியார்க் கல்வி நிறுவன அலுவலர்களுக்கும் தமிழ் - ஆங்கில இருமொழிப் புலமை யாளர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

பல நிலைகளில் இவ்வகராதி சிறப்பினைப் பெறுகிறது. இயன்ற வரைத் தூய தமிழைப் பயன்படுத்தியிருப்பது இந்தச் சொல்லகராதியின் தனிச்சிறப்பு எனலாம். அந்தத் தூய தமிழும் பணியாளர் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழாக இருப்பது இதன் கூடுதல் சிறப்பாகும். ஆங்கிலச் சொல்லின் பொருட் பயன்பாட்டுச் சூழல் மற்றும் தேவையின் அளவை உணர்ந்து ஒரு சொல்லுக்கு ஒரு பொருள், மாற்றுப் பொருள் மற்றும் ஒன்றுக்கு மேம்பட்ட பொருட்களை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

மேலும் பல சிறப்புகள் இவ்வகராதியில் காணப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றை இங்குச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக அமையும்.

Abroad என்பது பெயரன்று; அது வினையடை என்பதை Adv. எனச் சுட்டியிருப்பதும், Emeritus என்பது பெயரடை என்பதை Adj. என விளக்கியிருப்பதும் ஆசிரியரின் பயன்பாட்டுத் தெளிவு, ஆங்கிலத்-தமிழ்ப் புலமை ஆகியவற்றை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

Ph.D. (முனைவர்) பட்டம் பெற்ற பிறகு மேலும் படித்துப் பெறுகின்ற D.Litt., D.Sc. ஆகிய பட்டங்களைப் பெற்றவர் தமிழில் 'பேரறிஞர்' எனவும் 'முது முனைவர்' எனவும் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் அவர்களை "நிறையறிஞர்" என்று நூலாசிரியர் மொழியாக்கம் செய்துள்ளார்.

Applied, Practical ஆகிய இரு சொற்களும் தம்முள் நுட்பமான பொருள் வேறுபாடு கொண்டவை என்பதை இவ்வகராதி நமக்குத் தெளிவு படுத்துகிறது. இரண்டு சொற்களுமே, 'செயல்முறை சார்ந்த' என்கிற

பொருளமைதி பெற்றவை. ஆகவே, இப்பொருள் மயக்கத்தை நீக்கும் வகையில்

Applied - பயன்பாட்டு
Practical - செயல்முறை சார்ந்த

என்று விளக்கிப் பொருள் வேறுபாடு காட்டியுள்ளது பாராட்டற்குரியது.

Law, Act, Statute ஆகிய சொற்களை பொதுவாகச் சட்டம் என்றே தமிழில் கொள்ளப்பட்டு வருகின்றன. என்றாலும் ஆங்கில மொழியில் இச்சொற்கள் பயன்பாட்டளவில் சில நுட்பமான பொருள் வேறு பாடுகளைக் கொண்டவையாகும். இதனை மிகச் சரியாக இவ்வகராதி

Law - சட்டம்
Act - (சட்ட மன்றங்களில் ஆக்கப்படுகின்ற காரணத்தால்) 'ஆக்கச் சட்டம்'
Statute - (நிறுவனப் பயன்பாடுகளில் வருவதால்) 'நிறுவனச் சட்டம்'

எனத் தமிழாக்கம் செய்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறுவதற்காக அறிமுகப்படுத்தப்படும் பாடப் பொருள்களுக்கு ஒத்த மொழியாக்கத்தையும் இந்நூலில் காணலாம்.

Nautical Science என்னும் சொல்லுக்குக் 'கடல்சார் அறிவியல்' அல்லது 'கப்பல்சார் அறிவியல்' என்கிற சொல்லாக்கங்கள் தமிழில் வழங்கப்படுகின்றன. இவை ஆங்கிலச் சொற்பொருளின் முழுமையை நமக்குச் சரியாகக் காட்டவில்லை. இதனை இச்சொல்லகராதி 'கடற்கலன் சார் அறிவியல்' என்று ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் தந்துள்ளது.

இவ்வகராதி சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை தலைவர் வ. ஜெயதேவன், ஆங்கிலத் துறைத்தலைவர் முனைவர் (செல்வி) சி.தா. இந்திரா, தொல்வரலாறு மற்றும் தொல்லியல் துறைத்தலைவர்

முனைவர் ப. சண்முகம் ஆகியோரின் வழி காட்டுதலின் துணையோடு வெளிவருகிறது. இப்பயன்பாட்டு அகராதி காலப்போக்கில் மேலும் புதிய தமிழாக்கங்களையும் ஏற்புடைய திருத்தங்களையும் பெறக்கூடும்.

பல்கலைக்கழகப் பணியாளர்களுக்குப் பயன்படும் வகையில் வேறெவரும் செய்திடாத முன்முயற்சியான இந்த சொல்லகராதியை உருவாக்கி அரிய பணியைத் திறனுடன் நிறைவு செய்த சென்னைப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு அலுவலரும், தொகுப்பாசிரியருமான முனைவர் ச. மல்லிராஜா அவர்களைப் பாராட்டுகிறேன். அனைவர்க்கும் பயன்படும் இப்பயன்பாட்டு அகராதி இப்பல்கலைக்கழகத்தின் சாதனைச் சிகரங்களுள் ஒன்றாக அமையுமெனக் கருதுகிறேன்.

அருள்தந்தை முனைவர் ச. இன்னாசி முத்து, சே.ச.
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

சென்னை.
9-5-2003

முன்னுரை

2002 ஜூன் திங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு அலுவலராகப் பொறுப்பேற்றபோது பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகம் பிற பல்கலைக் கழகங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்க வேண்டும் என்ற முனைப்போடும், தமிழ்மொழிக்குப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தோடு சரியாசனம் அமைத்துத்தரவேண்டும் என்ற விழுமிய எண்ணத்தோடும் எனக்குச் சில சிறப்புப்பணிகளை அளித்தார். அவற்றுள் ஒன்றுதான் "பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல் லகராதி (ஆங்கிலம் - தமிழ்)" ஒன்றைத் தயாரித்து அளித்திடல் வேண்டும் என்பது. அவரிட்ட பணியை என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டிய அளவில் உருவாக்கி அளித்துள்ளேன். இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்த அப்பெருந்தகைக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வகராதியைத் தயாரிப்பதில் எனக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவை பல காலகட்டங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பொற்கோ, முனைவர் கா.மீனாட்சிசுந்தரம் போன்ற அறிஞர் பெருமக்களின் வழிகாட்டுதலின் பேரிலும், தலைமையின் கீழும் இயங்கிய குழுக்கள் தயாரித்து அளித்திருந்த சென்னைப் பல்கலைக் கழகக் கலைச் சொற்பட்டியல்களும், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் தொகுத்து வெளியிடப்பட்ட ஆங்கிலம் - தமிழ் ஆட்சிச் சொல்லகராதியுமாகும்.

தமிழ் வளர்ச்சித்துறையின் ஆட்சிச்சொல்லகராதி தமிழக அரசின் பல்வேறு துறைகளையும் தழுவிய ஆட்சிச் சொற்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதாலும், சென்னைப் பல்கலைக்கழகம் கல்வித்துறையின் ஓர் அங்கமாக இருப்பதோடு பிற அரசுத் துறைகளோடு நெருக்கமான உறவுடையதாக இருப்பதாலும் இப்பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல்லகராதியில் உள்ள பெரும்பான்மையான சொற்கள் தமிழ் வளர்ச்சித்துறையின் ஆட்சிச் சொல்லகராதியிலிருந்தே எடுத்தாளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்திற்கென்றே பயன்படும் சொற்களும், தொடர்களும் பல்கலைக்கழகக் கலைச் சொற்பட்டியல் களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் தமிழ்வளர்ச்சித் துறைக்கும், பல்கலைக்கழகக் கலைச்சொற் தயாரிப்புக் குழுவினர்க்கும் கடப்பாடுடையேன் ஆவேன்.

சுருங்கிய கையடக்கப் பதிப்பாக வரவேண்டும் என்ற நோக்கில் பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களும் தொடர்களுமாக ஏறத்தாழ 4500 பதிவுகள் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன.

ஆங்கிலத்தில் ஒரேசொல் பெயராகவும், வினையாகவும், பெயருரிச் சொல்லாகவும், வினையுரிச் சொல்லாகவும் வழங்கத்தக்கதாக உள்ளதால் பொருள் வேறுபாட்டையுணர்த்த வேண்டுமிடத்தில் **(n), (v), (adj), (adv)** போன்ற சுருக்கச்சொற்கள் ஆங்கிலச் சொற்களின் முடிவில் தரப்பட்டுள்ளன.

(எ-டு)	**Annex (v)**	-	பின் இணை
	Annex(e) (n)	-	பின்னிணைப்பு
	Abroad (adv)	-	வெளிநாட்டில் / வெளிநாட்டுக்கு
	Emeritus (adj)	-	ஓய்வுபெற்ற / கௌரவ

ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் பலவாக இருப்பதாலும், ஒரே ஆங்கிலச்சொல் பல பொருள்களைத் தருவதாலும், அச்சொற்களுக்கு நிகரான சொற்களை / தொடர்களைத் தமிழில் வழங்கும்போது இருவகையான குறியீடுகள் கையாளப்பட்டுள்ளன. ' / ' என்ற வெட்டுக்குறி 'அல்லது' என்னும் பொருள்பட அடுத்து வரும் சொல் அதே பொருள்படும் வேறொரு சொல் என்பதை உணர்த்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ' ; 'என்ற அரைப்புள்ளி தொடர்ந்துவரும் சொல் வேறொரு பொருளைக் குறிப்பிடும் என்பதற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(எ-டு)	**Late fee**	-	தாமதக் கட்டணம் / சுணக்கக் கட்டணம்
	Key	-	திறவுகோல் ; வழிகாட்டும் குறிப்பு

பல்கலைக்கழக வழக்கில் ஏற்கனவே உள்ள வழக்காற்றுச் சொற்களோடு சொற்பொருள் விரிவு கருதி பல புதிய சொல்லாக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சான்றாக **M.A.** என்பதற்குக் கலையியல் நிறைஞர் என்ற வழக்கு இருப்பினும் முதுவர் / முதுநிலையர் என்ற தொடர்களும் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளன.

இப்பணி நிறைவுபெறுவதில் உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி நெறிப்படுத்திய முனைவர் வி. ஜெயதேவன் (தமிழ்த்துறை), முனைவர் சி.டி. இந்திரா (ஆங்கிலத்துறை), முனைவர் பி. சண்முகம் (தொல்வரலாறு மற்றும் தொல்லியல் துறை) அவர்களுக்கும் முன்னாள் பதிப்புத்துறை இயக்குநர் முனைவர் பி. மருதமுத்து அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலுக்கு அழகியதோர் அணிந்துரை வழங்கிய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அருள்தந்தை முனைவர் சி. இன்னாசிமுத்து தே.ச., அவர்களுக்கு என் நிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பணி நூல் வடிவில் வெளிவர என்னுடன் பெரிதும் ஒத்துழைத்த என் உதவியாளர்கள் திருமதி வி. பாரதி, திரு ஆர். முரளி அவர்களுக்கும்,

நல்லமுறையில் அச்சிட்டு உதவிய கீதா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் உரிமை யாக்குகிறேன்.

அடுத்துவரும் பதிப்புகள் இன்னும் பரந்த சொல்லாட்சியோடும் திருத்தங்களோடும் பொலிவுற வெளிவர இவ்வகராதியைப் பயன்படுத்து வோரிடமிருந்தும், பேராசிரியப் பெருமக்களிடமிருந்தும் திறனாய்வுகளும், அறிவுரைகளும், கருத்துக்களும் நன்றியுடன் வரவேற்கப் படுகின்றன.

சென்னை - 5
1.1.2003

முனைவர் ச. மல்லிராஜா
மொழிபெயர்ப்பு அலுவலர்.
சென்னைப் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக அலுவலகப் பயன்பாட்டுச் சொல்லகராதி

(ஆங்கிலம் - தமிழ்)

A

Abandon	...	விட்டுவிடு / கைவிடு / துற
Abatement of Charges	...	கட்டணக்குறைப்பு / தள்ளுபடி
Abbreviation	...	சுருக்கக்குறியீடு
Abridged Edition	...	சுருக்கப்பட்ட பதிப்பு
Abridged Report	...	சுருக்கஅறிக்கை
Abroad (adv)	...	வெளிநாட்டிற்கு / வெளிநாட்டில்
Absence	...	இன்மை; வராமை
Absentee	...	வராதவர்; இல்லாதவர்
Absentee Statement	...	வராதவர் விவர அறிக்கை
Absorb	...	எடுத்துக்கொள்; சேர்த்துக்கொள்
Abstract	...	சுருக்கம் / சுருக்கக் குறிப்பு
Abstract of Accounts	...	கணக்குகளின் சுருக்கக் குறிப்பு
Abstract Statement	...	சுருக்கப் பட்டியல் / சுருக்க அறிக்கை
Abuse of power	...	அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தல்
Academic(adj)	...	கல்வி தொடர்பான
Academic (n)	...	பல்கலைக்கழக / கல்லூரி ஆசிரியர்
Academician	...	கல்வியாளர் / கல்விக்கழக உறுப்பினர் / கலைக்கழக உறுப்பினர்
Academic Council	...	கல்வி நெறி மாமன்றம் / கல்விக் குழு
Academic Institutions	...	கல்வி நிறுவனங்கள்
Academic Law	...	கோட்பாட்டுச் சட்டம்

Academic Robes	...	கல்விக்கழக அங்கிகள்
Academic Staff College	...	கல்வியியல் பணியாளர் கல்லூரி
Academic Year Course	...	கல்வியாண்டுப் படிப்பு
Academy	...	மன்றம் / கலைக்கழகம்
Acceptance Certificate	...	ஏற்புச் சான்றிதழ்
Acceptance of Tender	...	ஒப்பந்தப் புள்ளி ஏற்பு
Accepted and Countersigned	...	ஏற்று மேலொப்பமிடப்பட்டது
Accepted in principle	...	கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது
Accessory	...	துணைக்கருவி ; துணை ஆள்
Accommodation	...	இடவசதி
Account(n)	...	கணக்கு
Account(v)	...	கணக்கிடு
Accountancy	...	கணக்கியல்
Account Contra	...	எதிர்க்கணக்கு
Accountancy of Taxation Law	...	வரிவிதிப்புச் சட்டக் கணக்கியல்
Accountant General	...	மாநிலக் கணக்காய்வுத் தலைவர்
Accounting	...	கணக்கு வைப்பு
Accounting Procedure	...	கணக்குவைப்பு முறை
Accounting Year	...	கணக்குவைப்பு ஆண்டு
Accounts Officer	...	கணக்கு அலுவலர்
Accredit	...	மதிப்பேற்று; தரமளி ; சான்றளி
Accreditation Council	...	தர மதிப்பீட்டுக் குழு
Accredited	...	தகுதி பெற்ற; ஏற்பளிக்கப்பட்ட
Accredited Agent	...	ஏற்கப்பட்ட முகவர்
Accredited the Five Star Level	...	ஐந்து நட்சத்திரத் தகுதிபெற்றது
Accusation (n)	...	குற்றச்சாட்டு

Accused (adj)	...	குற்றஞ்சாட்டப்பட்ட
Accute	...	கடுமையான
Acid test	...	கடுந்தேர்வு
Acknowledgement	...	ஏற்புக் குறிப்பு; ஒப்புகை
Ackonwledgement and Provisional Admission Card	...	ஏற்பு மற்றும் தற்காலிக அனுமதி அட்டை
Acquisition	...	கையகப்படுத்தல்
Acquittance Register	...	பற்றொப்பப் பதிவேடு
Acquittance Roll	...	பற்றொப்பப் பட்டியல்
Act	...	சட்டம் /சட்டமன்றச் சட்டம்
Acting	...	மாற்றாள் வேலைபார்க்கிற / தற்பொழுதைக்குப் பணியாற்றுகிற
Acting arrangement	...	தற்காலிக ஏற்பாடு
Acting incumbent	...	மற்றாள் முறைப் பணியாளர் ; தற்காலிக மாற்றாள் / மாற்றுப் பணியாள்
Acting personnel	...	மாற்றாள்முறைப் பணியாளர்
Action	...	நடவடிக்கை; செயல்
Action Committee	...	நடவடிக்கைக் குழு
Actionable wrongs	...	நடவடிக்கை எடுப்பதற்குரிய முறைகேடுகள்
Activate	...	முடுக்கிவிடு
Active Service	...	முழுநேரப் பணி
Actual Balance	...	உள்ளபடியான இருப்பு
Actual Expenditure	...	உள்ளபடியான செலவு
Actual Receipt	...	உண்மையான வரவு
Actuary	...	காப்பீட்டுக் கணிப்பியல்
Adaptation	...	மாற்றி அமைத்தல் / தக அமைத்தல்
Addendum	...	பின்னிணைப்பு
Additional	...	கூடுதல்

Additional Charge	...	கூடுதல் பொறுப்பு
Additional Examiner	...	கூடுதல் தேர்வாளர்
Additional Fee	...	கூடுதல் கட்டணம்
Additional Security	...	கூடுதல் பாதுகாப்பு; கூடுதல் பிணை
Additional Tax	...	கூடுதல் வரி
Address Slip	...	முகவரிச் சீட்டு
Adhesive Stamp	...	ஒட்டுவில்லை
Ad hoc	...	குறிப்பிட்ட ஒன்றுக்கான / தற்காலிகமான/ தனியான / சிறப்பு ஏற்பாடான
Ad hoc Committee	...	சிறப்புக் குழு
Ad hoc Grant	...	தனி மானியம் / சிறப்பு மானியம்
Ad hoc Rules	...	தற்காலிக விதிகள்
Adif-I-Fazil	...	அடிப்-இ-பசில்
Adjourn	...	தள்ளிவை; நிறுத்திவை
Adjournment Motion	...	ஒத்திவைப்புத் தீர்மானம்
Adjourn sine die	...	நாள் குறியாமல் ஒத்திவை
Adjudge	...	முடிவு செய் / தீர்ப்பளி
Adjudication	...	தீர்ப்பு
Adjudication Committee	...	தீர்ப்புக் குழு
Adjudicator	...	தீர்ப்பாளர்
Adjust (v)	...	சரிக்கட்டு / தகவமை
Adjusting Heads	...	சரிக்கட்டும் தலைப்புகள் / தகவமைப்புத் தலைப்புகள
Adjustment (n)	...	சரிக்கட்டல் / தகவமைப்பு
Adjustment Bill	...	சரிக்கட்டல் பட்டி
Administration	...	ஆட்சி / நிர்வாகம்/ ஆளுகை
Administration Law	...	ஆட்சிசார் சட்டவியல் / ஆட்சிச் சட்டம்
Administration of Estates	...	சொத்து நிர்வாகம் / சொத்து ஆளுகை

Administration of Justice	...	நீதி வழங்கல் ; நீதி நிர்வாகம்
Administrative Authority	...	ஆட்சி அதிகாரி / ஆணைக் குழு
Administrative Control	...	ஆட்சிக் கட்டுப்பாடு
Administrative Glossary	...	ஆட்சிச் சொல் அகரமுதலி / அகராதி கலைச் சொற்பட்டி
Administrative Head	...	ஆட்சித் தலைவர்
Administrative Law	...	ஆட்சிமுறைச் சட்டவியல்
Administrative Law & Industrial Law	...	ஆட்சிமுறைச் சட்டம் மற்றும் தொழில் துறை சார் சட்டவியல்கள் / நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிற் சட்டம் / ஆளுமைச் சட்டம் மற்றும் தொழிற் சட்டம்
Administrative Officer	...	ஆட்சி அலுவலர்
Administrative Powers	...	ஆட்சி அதிகாரங்கள்
Administrative Sanction	...	ஆட்சிமுறை ஒப்பளிப்பு
Administrative Section/ Wing	...	ஆட்சிமுறைப் பிரிவு / பகுதி
Administrator	...	ஆட்சியர்
Administrator General	...	பேராட்சியர்
Admissible Allowances	...	உரிய படிகள் / அனுமதிக்கத்தக்க படிகள்
Admission	...	நுழைவு / அனுமதி / சேர்க்கை
Admission Fee	...	சேர்க்கைக் கட்டணம்
Admission of Claim	...	உரிமைக் கோரிக்கை ஏற்பு
Admission Register	...	சேர்க்கைப் பதிவேடு
Admit	...	நுழையவிடு / சேர்த்துக் கொள்
Adult Education	...	வயதுவந்தோர் கல்வியியல் / கல்வி
Ad valorem (adv)	...	மதிப்பீட்டின்படி
Advance(n)	...	முன்பணம்
Advance(v)	...	முன்பணம் கொடு ; முன் கொண்டு செல் / தள்ளு

Advanced Accounts	...	உயர்நிலைக்கணக்குப் பதிவியல் / பதிவு
Advanced Business Administration	...	உயர்நிலை வணிக நிர்வாகவியல் / நிர்வாகம்
Advance Collection	...	முன் தண்டல்
Advance Copy	...	முன் படி / நகல்
Advance Register	...	முன்பணப் பதிவேடு
Advanced Studies	...	உயர்நிலைப் படிப்பு
Advanced Theory	...	உயர்நிலைக் கோட்பாடு / கோட்பாட்டியல்
Adverse Remarks	...	குறைக் குறிப்புரைகள்
Advertisement and Salesmenship	...	விளம்பரமும் விற்பனைத்திறனும்
Advice (n)	...	அறிவுரை / நல்லுரை
Advice Slip	...	அறிவிப்புச் சீட்டு
Advise (v)	...	அறிவுரை வழங்கு
Advisory Board	...	அறிவுரைக் குழுமம்
Advisory Committee	...	அறிவுரைக் குழு
Advisory Memo	...	அறிவுரைக் குறிப்பு
Advocate General	...	மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்
Aeronautical Education and Training	...	வானூர்தியியல் கல்வியும் பயிற்சியும்
Aeronautical Engineering	...	வானூர்திப் பொறியியல்
Aeronautics	...	வானூர்தியியல்
Aesthetic	...	கலைநயமிக்க / அழகுணர்ச்சி சார்ந்த / கலையுணர்ச்சிமிக்க / மெய்ப்பாட்டிய லுணர்வுள்ள
Affair	...	அலுவல் ; செயல் ; விவகாரம்
Affidavit	...	ஆணை உறுதி வாக்கு மூலம் / ஆணை உறுதி ஆவணம்
Affiliation	...	இணைப்பு

Aforesaid	...	மேற்சொல்லப்பட்ட/ முன்னுரைக்கப்பட்ட
Afzal-ul-ulama	...	அப்சல் - உல் - உலாமா
Age Certificate	...	வயதுச் சான்றிதழ்
Age Limit	...	வயது வரம்பு
Agencies	...	முகவர்கள்
Agency	...	முகமை / முகவாண்மை
Agenda	...	பொருள் நிரல்
Agent	...	முகவர்
Aggregate (n)	...	மொத்தம் / திரள்
Agreement	...	உடன்பாடு / உடன்படிக்கை
Agreement and Contract	...	உடன்படிக்கையும் ஒப்பந்தமும்
Agreement Bond	...	உடன்படிக்கைப் பிணைமுறி
Aggrieved	...	இடருற்ற; மனக்குறையுடைய
Agriculture	...	வேளாண்மையியல் / வேளாண்மை
Agronomy	...	உழவியல்
Aide-de-camp	...	ஆளுநர் மெய்க்காப்பாளர்
Aided College	...	அரசு உதவி பெறும் கல்லூரி
Aims and Objectives	...	நோக்கங்களும் குறிக்கோள்களும்
Air Condition	...	காற்றுப் பதனம்
Air Mail	...	வான் அஞ்சல்
Air Pollution	...	காற்றுத் தூய்மைக்கேடு
Aircraft Structure	...	வானூர்திக் கட்டமைப்பு
Engineering	...	எந்திரவியல்
Airport	...	வானூர்தி நிலையம்
Album	...	திரட்டு வைப்பேடு
Algebra	...	குறிக்கணக்கியல்
Alias (n)	...	மறுபெயர்
Alias (adv)	...	மறுபெயராக
Alimony	...	வாழ்க்கைச் செலவுப் படி

Allied Subjects	... துணைப்பாடங்கள் / இணைப்பாடங்கள் இணைநிலைப் பாடங்கள்
All India Service	... அனைத்திந்தியப் பணி
Allergy	... ஒவ்வாமை
Allocation of Fund	... நிதி ஒதுக்கீடு
Allocation of Seat	... இட ஒதுக்கீடு
Allopathy	... ஆங்கில மருத்துவம் / எதிர்முனை மருத்துவம்
Allot	... பங்கிட்டளி / ஒதுக்கிக் கொடு
Allotment Register	... பங்கீட்டுப் பதிவேடு
Allottee	... ஒதுக்கீடு பெறுபவர்
Allowance	... படி
Almanac	... நாள் கோள் குறிப்பு (பஞ்சாங்கம்)
Almirah	... நிலைப் பேழை / நிலை அடுக்கு
Alpha System of Filing	... அகர முதலி கோப்பு முறை
Alphabet	... மொழியின் எழுத்துத் தொகுதி; நெடுங்கணக்கு
Alphabetical List	... அகர முதலிப் பட்டியல்
Alphabetical Order	... அகரவரிசை
Alphabetically (adv)	... அகரமுதலாக
Alteration Memo	... மாற்றக் குறிப்பு
Alternative Occupation	... மாற்றுத் தொழில்
Alternative Vote	... ஒற்றை மாற்று வாக்கு
Alumni	... பழைய மாணவர் / முன்னாள் மாணவர்
Amendment	... திருத்தம்
Amendment of Act	... சட்டத் திருத்தம்
Amnesty	... பொது மன்னிப்பு
Anachronism	... கால முரண்பாடு; காலத்திற்கொவ்வாமை
Anaemia	... இரத்த சோகை; குருதிக்குறைவு

Anaesthesiology	...	உணர்விழப்பு / நினைவிழப்பு மருந்தியல்
Anaesthetic	...	மயக்க மருந்து
Analogy	...	ஒப்புமை
Analysis	...	பகுப்பாய்வு
Analyst	...	பகுப்பாய்வர்
Analytical Chemistry	...	பகுப்பு வேதியியல் / பகுப்பாய்வு வேதியியல்
Analyze(v)	...	பகுத்தாய்வுசெய்
Anatomy	...	உடற் கூறு இயல் / உடல் கூறு அமைப்பியல்
Ancient Document	...	தொல்லாவணம்
Ancient Historical Monuments	...	தொல்வரலாற்று நினைவுச் சின்னங்கள்
Ancient History and Archaeology	...	தொல்வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வியல்
Ancient Writing	...	தொல் எழுத்தியல்
Ancillaries / Minor Subjects	...	துணைப் பாடங்கள் / துணைநிலைப் பாடங்கள்
Ancillary Industries	...	துணைத் தொழில்கள்
Ancillary Units	...	துணை அலகுகள் / துணைப் பிரிவுகள்
Andrology	...	மூத்தோர் கல்வியியல்
Animal Husbandry	...	கால்நடைப் பராமரிப்பு
Annals	...	ஆண்டுக் குறிப்பு வரலாறு / வரலாற்றுப் பதிவேடுகள்
Anna Centre for Public Affairs	...	அண்ணா பொதுவாழ்வியல் மையம்
Annex (e)(n)	...	பிற் சேர்க்கை / பின் இணைப்பு
Annex (v)	...	பின் இணை
Anniversary	...	ஆண்டுவிழா / ஆண்டுநிறைவு விழா
Announcement	...	அறிவிப்பு
Annual Audit	...	ஆண்டுத் தணிக்கை
Annual Audit Objection Statement	...	ஆண்டுத் தணிக்கை மறுப்புரைப் பட்டியல் / அறிக்கை

Annual Balance Sheet ... ஆண்டு இருப்புநிலைக் குறிப்பு / ஆண்டு ஐந்தொகைக் குறிப்பு

Annual Establishment List ... பணியாளர் ஆண்டுப் பட்டியல்

Annual Establishment Return ... பணியாளர் ஆண்டு விவரஅறிக்கை

Annual Financial Statement ... ஆண்டு நிதிநிலை அறிக்கை

Annual Increment ... ஆண்டு ஊதிய உயர்வு

Annual Programme of Work ... ஆண்டுக்கான வேலைத்திட்டம்

Annual Report ... ஆண்டறிக்கை

Annuity ... ஆண்டுத்தொகை

Annuity Deposit ... ஆண்டு வைப்புத் தொகை

Annulment ... நீக்கல் / ஒழிப்பு

Anomaly ... முரண்பாடு / பொருந்தாமை

Anonymous ... எழுதியவர் பெயரில்லாத

Ante ... முந்திய

Antecedence ... முந்திய நிலை

Antecedent ... முந்திய நிகழ்ச்சி

Antedated ... முன்னாளிட்ட / முன்தேதியிட்ட

Anthropology ... மானிடவியல்

Anti ... எதிரான

Anticipatory Vacancy ... எதிர்ப்பார்ப்புக் காலியிடம்

Anti-clockwise ... இடஞ்சுழித்த

Antidote ... முறிவு / முறிவு மருந்து

Antiquities ... பழைமைச் சின்னங்கள்

Antiseptic ... நச்சுத் தடை / நுண்மத் தடை

Apex ... தலைமை / உச்சி

Apology ... மன்னிப்பு

Apparatus	...	செய் கருவி ; ஆய் கருவி
Appeal(v)	...	மேல்முறையிடு / வேண்டுகோள் விடு ; மேல்வழக்காடு
Appeal(n)	...	மேல்முறையீடு
Appeal Petition	...	மேல்முறையீட்டு மனு
Appeal Suit	...	உரிமையியல் மேல் முறையீட்டு வழக்கு
Appellant (adj)	...	மேல்முறையீடு தொடர்பான
Appellant (n)	...	மேல்முறையீட்டாளர்
Appellant Authority	...	மேல்முறையீட்டதிகாரி / மேல் முறையீட்டு ஆணைக்குழு
Appellant Jurisdiction	...	மேல்முறையீட்டு ஆட்சி வரம்பு
Appellate Tribunal	...	மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்
Appendix	...	பின் இணைப்பு
Appliances	...	துணைக்கருவிகள்
Applicable Sciences	...	பயன்பாட்டு / செயல்முறை அறிவியல்கள்
Applicant	...	விண்ணப்பதாரர் /மனுதாரர்
Application	...	விண்ணப்பம்/மனு
Application for Licence	...	உரிம விண்ணப்பம்
Application Form	...	விண்ணப்பப் படிவம்
Applied	...	செயல்முறை சார்ந்த / பயன்பாட்டு
Applied analysis	...	செயல்முறை பகுப்பாய்வு
Applied Electronics	...	செயல்முறை / பயன்பாட்டு மின்னணுவியல்
Applied Grammar	...	பயன்பாட்டு இலக்கணம்
Applied Geography	...	செயல்முறை / பயன்பாட்டுப் புவியியல்
Applied Geology	...	செயல்முறை / பயன்பாட்டு மண்ணியல் / நிலவியல்
Applied History	...	பயன்பாட்டு வரலாற்றியல்
Applied Nutrition	...	பயன்பாட்டு ஊட்டச் சத்தியல்
Applied Pharmaceuticals	...	செயல்முறை மருந்தாக்கம்
Applied Plant Science	...	செயல்முறை / பயன்பாட்டுப் பயிர் அறிவியல் / தாவர அறிவியல்

Applied Science ... செயல்முறை அறிவியல் / பயன்பாட்டு அறிவியல்/நடைமுறை அறிவியல்

Apply ... பயன்படுத்து ; தடவு / பூசு

Appoint ... பணியமர்வு செய் / பணியமர்த்து/ பணி நியமனம் செய்

Appointment ... நியமனம் / பணி நியமனம்

Appointment Committee... நியமனக்குழு

Appointment Order ... நியமன ஆணை

Appraisal ... மதிப்பீடு

Appraiser ... மதிப்பீட்டாளர்

Apprehend ... கைப்பற்று ; உணர் ; அஞ்சு

Apprehension ... கைப்பற்றல் ; அச்சம்

Apprentice ... தொழில் பழகுநர் / தொழில் பழகுவோர்

Apprenticeship ... தொழில் பழகுதல் / தொழில் பழகு பருவம்

Approbation ... பாராட்டு ; அங்கீகாரம்

Appropriate (v) ... ஒதுக்கிவை

Appropriate (adj) ... தக்க / தகுதி வாய்ந்த

Appropriation ... ஒதுக்கீடு / நிதி ஒதுக்கம்; கையாடல்

Appropriation Account ... பயன்படுத்தியதற்குக் கணக்கு

Appropriation Bill ... நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு

Approval ... ஏற்பு / ஒப்புதல் / அங்கீகாரம்

Approved Probationer ... தகுதி காண் பருவம் முடித்தவர் / தகுதி காணப் பெற்றவர்

Approved School ... சீர்திருத்தப்பள்ளி / ஏற்பளிக்கப் பெற்ற பள்ளி

Approver ... குற்றம் ஒப்பிய சான்றுரைஞர்

Approver's Evidence ... குற்றம் ஒப்பியவரின் சான்று

Aptitude ... உள்ச்சார்பு / பாங்கு / நாட்டம்

Aptitude Test ... உளச்சார்புச் சோதனை / தேர்வாய்வு

Aquaculture ... நீர்வாழுயிர் வளர்ப்பியல்

Aquarium	...	நீர்வாழுயிர் காட்சியகம்
Aquatic Plants	...	நீர்த்தாவரங்கள்
Arabic	...	அராபிக் இயல் / அரபு
Arable Land	...	பயிரிடத்தக்க நிலம்
Arbiter	...	நடுவர்
Arbitrary	...	தன்னிச்சையான / எதேச்சையான / கட்டில்லா
Arbitrate(v)	...	தீர்ப்பளி
Arbitration	...	நடுவர் தீர்ப்பு
Arbitrator	...	நடுவர்
Archaeological Remains	...	தொல்பொருள் அழிவெச்சங்கள்
Archaeological Site	...	தொல்பொருள் ஆய்வுக் களம்
Archaic	...	வழக்கொழிந்த
Architect	...	கட்டடக் கலைஞர்
Architecture	...	கட்டக்கலை ; சிற்பவியல்; கட்டடவியல் / கட்டட அமைப்பியல்
Archives	...	ஆவணங்கள் ; ஆவணக் காப்பகம்
Area	...	இடம் ; பரப்பு
Area Committee	...	பகுதிக் குழு / வட்டாரக் குழு
Arena	...	களரி / செயற்களம்
Argument	...	வாதம்: வழக்குரை
Arithmetic	...	எண்கணக்கியல்
Arraignment	...	குற்றச்சாட்டு ; கண்டனம்
Arrear	...	நிலுவை / முன்பாக்கி
Arrear Bill	...	நிலுவைப் பட்டி
Arrear Claim	...	நிலுவைக் கோரிக்கை
Arrear Collection	...	நிலுவைத் தண்டல்
Arrear List	...	நிலுவைப் பட்டியல்
Arrears of Pay	...	சம்பள நிலுவைகள்
Arrears of Pension	...	ஓய்வூதிய நிலுவைகள்

Art	...	கலை
Art Gallery	...	கலைக்கூடம்
Art paper	...	வழவழப்புத் தாள் / மேருகேற்றிய தாள்
Article	...	சட்டப் பிரிவு / கூறு / விதி ; பொருள் ; இதழ்க் கட்டுரை
Articles of Association	...	சங்க அமைப்பு விதிகள்
Articles of Peace	...	அமைதிக்கான ஒப்பந்த விதிகள்
Artificial Intelligence	...	செயற்கை அறிவுநுட்பவியல்
Artisan	...	கைவினைஞர்
Artist	...	கலைஞர்; ஓவியர்
Artistes	...	கலைஞர்கள்
Arts	...	கலைகள் / கலையியல்கள்
Arts Subjects	...	கலையியல் பாடங்கள்
Arts and Crafts	...	கலைகளும் கைத்தொழில்களும்
Arts College	...	கலைக் கல்லூரி / கலையியல் கல்லூரி
As a matter of fact	...	உள்ளபடியாக
As a matter of policy	...	கோட்பாட்டின்படி
As a matter of principle	...	கொள்கையின்படி
As a rule	...	பொதுவழக்கமாக
As a special case	...	தனிநேர்வாக / சிறப்புக் கூறாக
As and when required	...	தேவைப்பட்டபோதெல்லாம்
As applicable	...	பொருந்துமாறு
As on date	...	அன்றைய நாளில் உள்ளபடி
Aspersion	...	பழிதூற்றுதல் / அவதூறு
Assault	...	வலிந்து தாக்குதல்
Assembly Constituency	...	சட்டப்பேரவைத் தொகுதி
Assent	...	ஒப்புதல் / ஏற்பு / சம்மதம்
Assess	...	மதிப்பிடு ; வரிவிதி
Assessing Authority	...	வரிவிதிப்பு அதிகாரி / வரிவிதிப்பு ஆணைக்குழு
Assessment	...	மதிப்பீடு

Assessment of Duty ... தீர்வை மதிப்பீடு

Assessment of Tax ... வரி மதிப்பீடு

Assessment Orders ... வரிவிதிப்பு ஆணை

Assessment Tools ... கணிப்புக் கருவிகள்

Assessment Year ... வரிவிதிப்பு ஆண்டு

Assessor ... மதிப்பிடுபவர் ;வரிவிதிப்பவர்

Asset ... சொத்து/உடைமை

Assets and Liabilities ... உடைமைகளும் கடப்பாடுகளும் / சொத்துகளும் பொறுப்புகளும்

Assign ... ஒப்படை / ஒதுக்கு ; உரிமை மாற்று அளி

Assignment ... ஒப்படைப்பு / ஒதுக்கீடு ; உரிமை மாற்றம்

Assignee ... ஒப்படைப்பு / ஒதுக்கீடு / உரிமை மாற்றம் பெறுபவர்

Assignor ... ஒப்படைப்பு / ஒதுக்கீடு / உரிமை மாற்றம் அளிப்பவர்

Assistant ... உதவியாளர்

Assistant Registrar ... உதவிப் பதிவாளர்

Association ... கழகம் / பேரவை / சங்கம் / மன்றம்

Assume power ... அதிகாரம் மேற்கொள் / ஏற்றுக்கொள்

Assumption of Charges ... பொறுப்பு ஏற்பு / பதவி ஏற்பு

Assurance ... காப்புறுதி

Astrology ... சோதிடவியல்

Astronomy ... வானியல்

Asylum ... புகலிடம் ; காப்பகம்

At any cost ... எந்த வகையிலும்

At any rate ... எவ்வாறிருப்பினும்

Athlete ... தடகளப் போட்டியாளர் / விளையாட்டு வீரர்

Athletic Club ... விளையாட்டு மன்றம்

Atlas ... நிலப்படத் தொகுதி

Atmosphere	...	வளி மண்டலம் ; சூழல்
Atomic Energy	...	அணு ஆற்றல்
Attachment	...	பற்றுகை
Attendance	...	வருகைப் பதிவு / வருகை
Attendant	...	துணையாள்
Attest(v)	...	சான்றொப்பமிடு
Attestation	...	சான்றொப்பம்
Attested Copy	...	சான்றளிக்கப்பட்ட நகல் / படி
Attitude	...	மனப்பான்மை / உளப்பாங்கு
Attorney	...	வழக்குரைஞர்
A Uniform Standard	...	ஒருபடித்தான தரம்
Auction	...	ஏலம்
Audience	...	அவையோர் ; பேட்டி
Audience Hall	...	பார்வையாளர் கூடம்
Audio Recording	...	ஒலிப் பதிவு
Audio-Visual Aids	...	ஒலி - ஒளி துணைக்கலங்கள் / கேட்டல் காணல் துணைக்கருவிகள்
Audio-Visual Education	...	ஒலி - ஒளி கல்வி / கேட்டல் காணல் கல்வி
Audio-Visual Equipment	...	ஒலி - ஒளி தளவாடங்கள் / கேட்டல் - காணல் கருவித் தொகுதி
Audit (n)	...	தணிக்கை / கணக்காய்வு
Audit (v)	...	தணிக்கை செய் / கணக்காய்வு செய்
Audit Certificate	...	தணிக்கைச் சான்றிதழ்
Audit Clerk	...	தணிக்கை எழுத்தர்
Audit Fees	...	தணிக்கைக் கட்டணம்
Audit General	...	தணிக்கைத் தலைமை அலுவலர்
Audit Intimation	...	தணிக்கை அறிவிப்பு
Audit Notes	...	தணிக்கைக் குறிப்புகள்

Audit Objections	...	தணிக்கை மறுப்புரைகள்
Audit Officer	...	தணிக்கை அலுவலர்
Audit Register	...	தணிக்கைப் பதிவேடு
Audit Report	...	தணிக்கை அறிக்கை
Audit Slip	...	தணிக்கைச் சீட்டு
Auditing	...	தணிக்கை இயல் / தணிக்கை செய்தல்
Auditor	...	தணிக்கையர் / தணிக்கையாளர்
Auditor's Certificate	...	தணிக்கையர் / தணிக்கையாளர் சான்றிதழ்
Auditorium	...	அரங்கம் / அவைக் கூடம் / கலையரங்கம்
Augment	...	பெருக்கு / வளரச் செய்
Auspices	...	சார்பு / ஆதரவு
Auspicious	...	உகந்த ; நற்குறியுள்ள
Austerity	...	மிகு எளிமை / கடுங் கட்டுப்பாடு / ஒழுக்கம்
Author	...	நூலாசிரியர் / ஆக்கியோன்
Authentication	...	ஆக்க உரிமைச் சான்றளிப்பு
Authorities of the University	...	பல்கலைக் கழக ஆட்சி அதிகாரிகள் / ஆட்சி அமைப்புகள் / அதிகார வட்டங்கள் / ஆணைக் குழுக்கள்
Authoritative	...	அதிகாரம் பெற்ற
Authority	...	அதிகாரம் / அதிகாரி / ஆணைக் குழு
Authorization	...	அதிகாரம் / உரிமை வழங்கல்
Authorize	...	அதிகாரமளி / உரிமையளி
Authorized Capital	...	அனுமதியளிக்கப்பட்ட மூலதனம்
Authorized Dealer	...	அனுமதியளிக்கப்பட்ட வணிகர்
Authorized Edition	...	ஒப்பிய பதிப்பு
Authorized Forms	...	ஒப்பிய படிவங்கள்
Authorized Person	...	அதிகாரம் பெற்றவர் / உரிமை பெற்றவர்

Authorized Representative	...	அதிகாரம் / உரிமை பெற்ற சார்பாளர்
Automobile	...	தானியங்கி
Automobile Engineering	...	தானியங்கிப் பொறியியல்
Autonomous	...	தன்னாட்சி உரிமையுடைய
Autonomous Body	...	தன்னாட்சி அமைப்பு
Autonomous College	...	தன்னாட்சிக் கல்லூரி
Autonomy	...	தன்னாட்சி
Auxiliary (n)	...	துணையாளர் / உதவியாளர்
Auxiliary (adj)	...	துணையான / உதவியான
Average	...	சராசரி
Average Emoluments	...	சராசரி ஊதியம்
Average Pay	...	சராசரிச் சம்பளம்
Avocation	...	துணைத் தொழில்
Award	...	பரிசு ; தீர்ப்பு
Award of Black Mark	...	பிழைக் குறியீடு அளித்தல்
Axiom / Adage	...	முதுரை
Ayurvedhic Medicine and Surgery	...	ஆயுர் வேத மருத்து அறுவை இயல்கள் / ஆயுர்வேத மருந்து மற்றும் அறுவைசிகிச்சை

B

B.A. ... கலையியல் இளையர் / இளநிலையர்

B.A. Degrees (Under graduate degrees) ... இளநிலைக் கலைப் பட்டங்கள் (இளநிலைப் பட்டங்கள்)

B.Com. ... வணிகவியல் இளையர் / இளநிலையர்

B.D.S. ... பல் அறுவையியல் இளையர் / இளநிலையர்

B.E. ... பொறியியல் இளையர் / இளநிலையர்

B.Ed. ... கல்வியியல் இளையர் / இளநிலையர்

B.F.A. ... நுண்கலை இளையர் / இளநிலையர்

B.G.L. ... பொதுச் சட்டவியல் இளையர் / இளநிலையர்

B.L. ... சட்டவியல் இளையர் / இளநிலையர்

B.Lib.Sc. ... நூலக அறிவியல் இளையர் / இளநிலையர்

B.Lit. ... இலக்கியவியல் இளையர் / இளநிலையர்

B.P.Ed. ... உடற்கல்வியியல் இளையர் / இளநிலையர்

B.Pharm. ... மருந்தாக்கவியல் இளையர் / இளநிலையர்

B.Sc. ... அறிவியல் இளையர் / இளநிலையர்

B.Sc. Medical Laboratory Technology ... மருந்தியல் ஆய்வகத் தொழில் நுட்பவியல் இளையர்

B.Sc. Nursing ... செவிலியர் அறிவியல் இளையர் / இளநிலையர்

B.Tech. ... தொழில் நுட்ப இளையர் / இளநிலையர்

Back-file ... முன் கோப்பு

Backlog ... தேக்கம்

Bacteria ... நுண்மங்கள்

Bacteriology ... நுண்மவியல்

Badge	...	குறியீட்டுச் சின்னம்
Bail Application	...	பிணை விண்ணப்பம்
Bail Warrant	...	பிணையில்விடற்குரிய பற்றாணை
Balance	...	நிலுவை / இருப்பு
Balance at Credit	...	கணக்கில் உள்ள இருப்பு
Balance Budget	...	சமநிலை வரவு செலவுத் திட்டம்
Balance Sheet	...	வரவு செலவுக் குறிப்பு / இருப்புநிலைக் குறிப்பு / ஐந்தொகைக் குறிப்பு
Balanced Diet	...	ஊட்ட உணவு / சரிவிகித உணவு
Ballot Box	...	வாக்குப்பெட்டி
Ballot Paper	...	வாக்குச்சீட்டு
Bank Deposit	...	வங்கி வைப்புத் தொகை
Bank Draft	...	வங்கிப் பணக்கொடுப்பாணை / வங்கி வரைவோலை
Bank Management	...	வங்கியியல் மேலாண்மை / வங்கி மேலாண்மையியல்
Bank Notes	...	வங்கிப் பணமுறி
Banking	...	வங்கியியல்
Banking Charges	...	வங்கிக் கட்டணங்கள்
Bankrupt	...	நொடித்தவர்
Bankrupt Law	...	நொடிப்புச் சட்டம்
Bankruptcy Proceedings	...	நொடிப்பு நடவடிக்கைகள்
Banner Headline	...	முழுநீளப் பேரெழுத்துத் தலைப்பு
Bar	...	வழக்குரைஞர் குழாம் ; தடை
Bar Association / Bar Council	...	வழக்குரைஞர் கழகம் / வழக்குரைஞர் குழு
Barren Land	...	தரிசு நிலம்
Barter	...	பண்ட மாற்று
Basement	...	அடித்தளம்
Basic	...	அடிப்படையான
Basic Computer	...	அடிப்படைக் கணினியியல்

Basic Education	...	அடிப்படைக் கல்வி
Basic Servant	...	அடிப்படை ஊழியர் / அலுவலக உதவியாளர்
Basic Training	...	அடிப்படைப் பயிற்சி
Batch	...	தொகுதி / தொகுப்பு / குழு
Bearer Cheque	...	கொணர்பவர் பணம் பெறும் காசோலை
Behavior	...	நடத்தை
Belated	...	காலம் கடந்த
Below normal	...	இயல்பில் குறைந்த
Belt Area	...	நகர் சூழ் பகுதி
Benami Transaction	...	இரவல் பெயரில் நடவடிக்கை
Bench Court	...	நீதி மன்ற நடுவர் ஆயமன்றம்
Benefactor	...	நலம் புரிபவர் / புரவலர்
Beneficiary	...	பயனாளர் / பயனடைபவர்
Benefit of Doubt	...	ஐயநிலைப் பயன்
Benefit Performance	...	கொடை நிகழ்ச்சி
Benevolent Fund	...	நலநிதி
Bias	...	ஒருதலைச் சார்பு
Bibliography	...	நூற்றொகை / நூல் விவரப்பட்டி / நூல் அட்டவணை
Bill	...	சட்ட வரைவு ; பட்டி ; விளம்பரச்சீட்டு ; மசோதா
Bill Collector	...	வரித் தண்டலர்
Bill of Cost	...	செலவுப் பட்டி ; விலைமதிப்புப் பட்டி
Bill of Exchange	...	மாற்று முறி
Bill Register	...	பட்டிப் பதிவேடு
Binder	...	புத்தகம் கட்டுநர்
Biochemistry	...	உயிர் வேதியியல்
Biodata	...	தன் விவரக் குறிப்பு

Biodiversity of Medicinal Plants	...	மருத்துவத் தாவர உயிர்ப்பன்மை
Bioinformatics	...	உயிரியல் தகவல் தொழில்நுட்பவியல்
Biology	...	உயிரியல்
Biomedical Genetics	...	உயிர் மருத்துவ மரபியல்
Biophysics	...	உயிர் இயற்பியல்
Bioprocess Technology	...	உயிரிமுறைத் தொழில்நுட்பம்
Biostatistics	...	உயிர்ப் புள்ளியியல்
Biotechnology	...	உயிர்த் தொழில்நுட்பவியல்
Biotechnology of Medicinal and Aromatic plants	...	மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் உயிர்த்தொழில்நுட்பம்
Bit notice	...	துண்டு அறிக்கை
Black book	...	குற்றப் பதிவேடு
Black list	...	தவறிழைத்தோர் பட்டியல்
Blackmail	...	அச்சுறுத்திப் பணம் பறித்தல்
Black mark	...	ஒழுங்கீனக் குறி
Black market	...	கள்ள வணிகம்
Blackout	...	இருட்டடிப்பு / செய்தி மறைப்பு
Blank cheque	...	தொகை குறிப்பிடாக் காசோலை
Block grant	...	மொத்த மானியம்
Block letters	...	பெரிய எழுத்துகள்
Block survey	...	தொகுநிலை அளவை
Blotting pad	...	மையொற்றி
Blotting paper	...	மையொற்றுத் தாள்
Blueprint	...	முதல் நிலை உருவ வரைபடம் / நிழற்பட அச்சுமுறை
Board	...	வாரியம் / மன்றம் / குழுமம்
Board of Directors	...	இயக்குநர் குழுமம்
Board of Examiners	...	தேர்வாளர் குழுமம்
Board of Management	...	மேலாண் குழுமம்

Board of Research Studies ... ஆய்வியல் திட்டக் குழு

Board of Revenue ... வருவாய் வாரியம்

Board of Secondary Education ... இடைநிலைக் கல்விக் குழுமம்

Board of Studies ... பாடத் திட்டக் குழுமம்

Boarding Grant ... உணவு மானியம்

Bogus Entries ... பொய்ப் பதிவுகள் / போலிப் பதிவுகள்

Bonafide(adj) ... உண்மையான / நேர்மையான / சட்டப்படியான

Bond ... பிணை முறி

Bonus ... மிகைச் சம்பளம் / ஊக்க ஊதியம்

Book adjustment ... கணக்கில் சரிக்கட்டல்

Book balance ... ஏட்டு இருப்பு

Book binding ... புத்தகக் கட்டமைப்பு

Book case ... புத்தகப் பேழை

Book debts ... ஏட்டுக் கடன் குறிப்பு

Book-keeping ... வணிகக் கணக்கு முறை

Book rack ... நூல் அடுக்குத் தட்டு

Book Review ... நூல் மதிப்புரை

Book value ... ஏட்டு மதிப்பு

Book shelf ... நூல் அடுக்கம்

Booth ... சாவடி

Borrow ... கடன் வாங்கு

Borstal School ... இளங்குற்றவாளிகள் சிறைப்பள்ளி

Botany ... தாவரவியல்

Boy Scouts ... சிறுவர் சாரணப் பிரிவு

Boycott (v) ... புறக்கணி

Bracketed Heads ... அடைப்புத் தலைப்புகள்

Brain trust ... அறிஞர் குழு / திறனாளர் குழு

Branch	...	பிரிவு / கிளை
Brand	...	வணிகச் சின்னம் / குறி
Branded Weight	...	குறிக்கப்பட்ட எடை
Breach of Contract	...	ஒப்பந்த முறிவு / ஒப்பந்த மீறல்
Breach of Peace	...	அமைதிக் குலைவு
Breach of Privilege	...	உரிமை மீறல்
Breach of Promise	...	வாக்குறுதி மீறல்
Breach of Trust	...	நம்பிக்கைக் குலைவு / முறிவு
Break of Expenditure	...	செலவினக் கூறுகள்
Break of Service	...	பணி இடைமுறிவு
Brief notes	...	சுருக்கக் குறிப்புகள்
Brochure	...	சிற்றேடு / துண்டு வெளியீடு
Brought Forward (B.F)	...	முன்பக்கப்படி (மு.ப.)
Bulldozer	...	நிலச்சமன் செய் பொறி
Budget	...	வரவு - செலவுத் திட்டம் / வரவு-செலவுக் கணக்கு / நிதியறிக்கை
Budget Debate	...	வரவு - செலவுத் திட்ட விவாதம்
Budget Estimate	...	வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு
Buffer Stock	...	தாங்கிருப்பு
Building	...	கட்டடம்
Building Site	...	கட்டட மனை
Built up area	...	கட்டடப் பரப்பு
Bulletin	...	செய்தி அறிவிப்பு / வெளியீடு
Bundobust Duty	...	பாதுகாப்புப் பணி
Buntings	...	தோரணங்கள்
Bureau	...	செயலகம் ; நிலைப்பேழை
Bureaucracy	...	பணித்துறை ஆட்சி / ஒருமுக மைய ஆட்சி
Bureaucrat	...	அதிகார மனப்பான்மையர் / அதிகாரி
Bursar	...	பொருளாளர் / நிதியாளர்

Bursaries ... படிப்பு உதவித் தொகைகள்

Business Administration ... வணிக நிர்வாகவியல் / வணிக ஆள்முறை இயல் / வணிக நிர்வாகம்

Business Economics ... வணிகப்பொருளியல்

Business Management ... வணிக மேலாண்மை இயல்

Business Organisaton ... வணிக அமைப்பியல் / அமைப்பு

Business Return ... வணிக முறை விவர அறிக்கை

Business Statement ... அலுவல்முறை அறிக்கை

Bust ... மார்பளவு உருவச்சிலை

Buzzer ... அழைப்பொலியன்

By Air Mail ... வான் அஞ்சல் வழி

By Cheque ... காசோலை மூலமாக

By-election ... இடைத் தேர்தல்

By-lane ... குறுக்குச் சந்து

By-laws ... துணை விதிகள்

Bypass ... மாற்றுவழி

By-product ... உடன் விளை பொருள்

By Return of Post ... மறு அஞ்சலில்

By Sea Mail ... கடல் அஞ்சல் வழி

C

Cab	...	வாடகைச் சீருந்து
Cabinet Minister	...	பேராய அமைச்சர்
Cablegram	...	கடல் வழி தந்திச் செய்தி
Cadet	...	படைப் பயிற்சி மாணவர்
Cadre	...	பணிநிலைப் பிரிவு
Cadre and Category	...	பணிநிலைப் பிரிவும் வகையும்
Cadre Strength	...	பணிநிலைப் பிரிவாளர் எண்ணிக்கை
Café	...	சிற்றுண்டி விடுதி
Calculator	...	கணிப்புப் பொறி
Calculus	...	நுண்கணிதம் / நுண்கணிப்புமுறை
Calendar	...	நாள் காட்டி ; விவர அட்டவணை ; கால ஆவணம்
Calendar of Operation	...	செயல்முறை அட்டவணை
Calendar of Returns	...	விவர அறிக்கை அட்டவணை
Calendar Year	...	ஆங்கில ஆண்டு /கிறித்தவ ஆண்டு
Calender Year Course	...	ஆங்கில / கிறித்தவ ஆண்டுப்படிப்பு
Call Attention Motion	...	கவன ஈர்ப்புக் கோரிக்கை / தீர்மானம்
Call book	...	மறு கவனிப்புப் பதிவேடு
Call for records(v&n)	...	பதிவுருக்களைக் கோரு /கோரல்
Call to account(v&n)	...	கணக்குக் காட்ட / காரணங்காட்டக் கோரு / கோரல்
Calumny	...	அவதூறு
Camp(v&n)	...	தங்கு/ தங்கல்
Camp Clerk	...	தங்கல் எழுத்தர்
Camp Equipment	...	தங்கல் தளவாடங்கள்
Camp Tapal Arrangement	...	தங்கல் அஞ்சல் ஏற்பாடு
Campaign	...	இயக்க நடவடிக்கை

Camping Ground ... தங்கல் திடல்

Campus / Premises ... வளாகம்

Candidate ... நபர் / ஆள் / வேட்பாளர் ; பணிக்கு விண்ணப்பிப்பவர்; தேர்வு நாடுபவர்

Canon ... சட்டம் ; நெறிமுறை

Canon of Financial Propriety ... நிதி ஒழுங்கு நெறிமுறை

Canteen ... பணிமனைச் சிற்றுண்டிச் சாலை

Cantonment ... பாளையம்

Canvas cloth ... கித்தான் துணி

Canvassing agent ... ஆதரவு நாடும் முகவர்

Capacity ... கொள் திறன் / அறிவுத் திறன்

Capital ... முதலீட்டுத் தொகை ; தலைநகர்

Capital Account ... முதலீட்டுக் கணக்கு

Capital Budget ... முதலீட்டு வரவு செலவுத் திட்டம்

Capital Cost / Capital Expenditure ... முதலீட்டுச் செலவு

Capital Fees ... நுழைவு நன்கொடை

Capital Goods ... உற்பத்திச் சாதனப் பொருட்கள்

Capital Offence ... கொலைக்குற்றம்

Capital Outlay ... முதலீட்டுத் தொகை / முதலீட்டுச் செலவு

Capital Punishment ... மரண தண்டனை

Capital Reserve ... ஒதுக்கீட்டு முதல்

Capital-Works ... முதலீட்டுப் பணிகள்

Car ... சீருந்து / விசையுந்து / மகிழ்வுந்து

Carbon Paper / Carbon Sheet ... கரிப்புத் தாள் / மைபடி தாள்

Card ... அட்டை

Cardboard ... மெல்லிய அட்டை

Cardio Thoracic Surgery ... மார்பு / இருதய அறுவையியல்

Cardiology ... இருதயநோய் இயல்

Care Home	...	காப்பு இல்லம்
Career	...	வாழ்க்கைத் தொழில்
Caricature /Cartoon	...	கேலிச் சித்திரம் / பகடிப் படம்
Carpentry unit	...	தச்சு வேலைப் பிரிவு
Carriage	...	வண்டி
Carried over	...	அடுத்த பக்கத்திற்கு எடுத்து எழுதப்பட்டது
Carry on	...	தொடர்ந்து செய்
Carry out	...	நிறைவேற்று
Cart	...	கட்டைவண்டி
Cartography	...	வரைபட / விளக்கப்படத் தயாரிப்பு
Cart Stand	...	வண்டிப் பேட்டை
Cartage	...	வண்டிச் சத்தம்
Cartridge	...	தோட்டா
Cartridge paper	...	கெட்டித் தாள்
CAS (Centre for Advanced Study)	...	உயர்நிலை ஆய்வு மையம்
CAS (Centre for Advanced Study) in Botany	...	தாவரவியல் உயர்நிலை ஆய்வு மையம்
Case	...	நேர்வு; வழக்கு; பெட்டி; வகை
Case history	...	வழக்கு விவரம் ; நோய் விவரக் குறிப்பு
Cash balance	...	இருப்புத் தொகை
Cash book	...	பணக் குறிப்பேடு
Cash certificate	...	பணச் சான்றிதழ்
Cash chest	...	பணப் பெட்டகம்
Cash counter	...	பணம் செலுத்தும் / பெறும் இடம்
Cash crop	...	பணப் பயிர்
Cash in hand	...	கையிருப்புத் தொகை
Cash order	...	பணம் வழங்கு ஆணை
Cash remittance book	...	பணம் செலுத்துகைப் பதிவேடு

Cash sale	...	ரொக்க விற்பனை
Cash security	...	பணப் பிணையம்
Cash value	...	பண மதிப்பு
Cashier / Cash-keeper	...	காசாளர்
Casual	...	தற்காலிக
Cassette	...	ஒலி / ஒளி நாடாப் பேழை
Casual Inspection	...	தற்செயல் ஆய்வு
Casual labour	...	நாள் கூலியாள் / தற்காலிகப் பணியாளர்
Casual leave	...	தற்செயல் விடுப்பு
Casual vacancy	...	தற்செயல் காலியிடம்
Casualty ward	...	விபத்து மருத்துவப் பிரிவு
Catalogue	...	பட்டியல்
Cataloguing	...	அட்டவணைப்படுத்தல்
Catchword	...	கொளுச் சொல்
Category	...	வகை
Catering Technology	...	உணவாக்கத் தொழில் நுட்பம்
Caustic Remarks	...	கடுங் குறிப்புரை
Caution Money/Deposit	...	பிணைய முன்பணம் /வைப்புத் தொகை
Communication	...	செய்தித் தொடர்பு / தகவல் தொடர்பு
Cement	...	திண்காரை
Censor	...	தணிக்கையாளர்
Census	...	மக்கள் தொகைக் கணக்கெடுப்பு
Centenary Buildings	...	நூற்றாண்டு விழாக் கட்டடங்கள்
Centenary Celebration	...	நூற்றாண்டு விழா
Centre	...	மையம் ; நிலையம்
Centre for Atomic Research	...	அணு ஆராய்ச்சி மையம்
Centre for Disease Control	...	நோய்க் கட்டுப்பாட்டு மையம்
Central (adj)	...	மைய/மத்திய/நடுவண்
Central Bank	...	மைய வங்கி /மத்திய வங்கி
Central Government	...	மைய அரசு / மத்திய அரசு / நடுவணரசு
Central Grant	...	மைய அரசு மானியம்

Central Institute of Brackish Water Aquaculture	...	மைய அரசு உவர் இறால் வளர்ப்பு நிலையம்
Central Leather Research Institute	...	மைய தோல் ஆராய்ச்சி நிறுவனம்
Central list	...	மைய அரசு அதிகாரப்பட்டியல்
Centralization	...	ஒருமுகப்படுத்தல் / மையப்படுத்தல்
Centralization of Power	...	அதிகாரக் குவிப்பு
Ceremonial Dress	...	வினைமுறை அணிமணி ; சடங்குமுறை உடுப்பு
Ceremonial Parade	...	சிறப்புக்கால அணிவகுப்பு
Certificate	...	சான்றிதழ்
Certificate Course	...	சான்றிதழ்ப் படிப்பு
Certificate of Approval	...	ஏற்புச் சான்றிதழ்
Certificate of Identity	...	அடையாளச் சான்றிதழ்
Certificate of Nationality	...	நாட்டினச் சான்றிதழ்
Certificate of Posting	...	அஞ்சல் அனுப்புச் சான்றிதழ்
Certificate of Re-classification	...	மறு பகுப்புச் சான்றிதழ்
Certificate of Registration	...	பதிவுசெய் சான்றிதழ் / பதிவுச் சான்றிதழ்
Certificate of Transfer of Charges	...	பொறுப்பு மாற்றல் சான்றிதழ்
Certificate of Verification	...	சரிபார்ப்புச் சான்றிதழ்
Certified Copy	...	சான்றிட்ட நகல் / படி
Certify	...	சான்றிடு / சான்று வழங்கு
Chalan	...	செலுத்துச் சீட்டு
Chalkpiece	...	சுண்ணக் கோல்
Challenged Vote	...	மறுதளிப்பு வாக்கு
Chamber of Commerce	...	வணிகர் கழகம்
Champion	...	வாகையன் / பரிவு வினைஞன்

Chancellor	...	வேந்தர்
Change of Medium	...	பயிற்சி மொழி மாற்றம்
Channel of Correspondence	...	கடிதப் போக்குவரத்து வழி
Chapter	...	இயல் / பகுதி / அத்தியாயம் / தலைப்புத் தொகுதி
Chart	...	விளக்கப்படம்
Character	...	பண்பு
Charge allowance	...	பொறுப்புப் படி
Charge de Affairs	...	துணை நிலைத் தூதர்
Charge Memo	...	குற்றச்சாட்டுக் குறிப்பாணை
Charge partially proved	...	குற்றச்சாட்டு ஓரளவு எண்பிக்கப்பட்டது / நிரூபிக்கப்பட்டது
Charge Sheet	...	குற்ற அறிக்கை / குற்றப் பத்திரிகை
Charges	...	செலவுகள்; கட்டணங்கள்; குற்றச்சாட்டுகள்
Charges to be met	...	ஏற்க வேண்டிய செலவு
Charitable Endowment	...	அறக்கட்டளை
Charter	...	பட்டயம் / உரிமை ஆவணம்
Chartered Accountant	...	பட்டயக் கணக்கர்
Charts	...	விளக்கப்படங்கள்
Check	...	சரிபார்; தடை செய்
Check List	...	சரிபார்ப்புப் பட்டியல்
Check Memorandum	...	சரிபார்த்தல் குறிப்பு
Check Post	...	தணிக்கைச் சாவடி
Check Slip	...	சரிபார்த்தல் சீட்டு
Checking Inspector	...	சரிபார்ப்பு ஆய்வாளர்
Checking of Personal Registers	...	தன் / தனியாள் பதிவேடுகளைச் சரி பார்த்தல்
Chemistry	...	வேதியியல்
Chemotaxonomy	...	வேதியியல் சேர்ம வகுப்பு-தொகுப்பு முறையியல்

Cheque	...	காசோலை
Chequebook	...	காசோலை ஏடு
Chest of Drawers	...	இழுப்பறை அடுக்குப் பெட்டி
Chief (n)	...	தலைவர் / முதன்மை
Chief (adj)	...	முதன்மையான / தலைமையான
Chief Accounts Officer	...	முதன்மைக் கணக்கு அலுவலர்
Child Development and Family Relationship	...	குழந்தை வளர்ச்சி மற்றும் குடும்ப உறவியல்கள்
Child, Family and Social Welfare	...	குழந்தை,குடும்பம் மற்றும் சமுதாய நல இயல்கள்
Child Health	...	சேய் உடல் நலம் / நலவியல்
Chit Fund	...	சீட்டு நிதி (நிறுவனம்)
Chitta	...	சிட்டா / குறிப்பேடு
Chitta Extract	...	சிட்டா / குறிப்பேடு எடுபகுதி
Choice Based Credit System	...	விருப்ப அடிப்படைத் தகவெண் முறை / விருப்பம் சார் கல்வித் தர எண் முறைத் திட்டம்
Christian Studies	...	கிறித்தவவியல்
Circuit House	...	சுற்றுலா மாளிகை
Circular	...	சுற்றறிக்கை
Circulation Note	...	சுற்றுக் குறிப்பு
Citation	...	மேற்கோள்; தகுதியுரை
Cite	...	குறிப்பிடு; மேற்கோள் காட்டு
Cited above	...	மேற் குறிப்பிட்ட
Citizens' Legal Rights	...	குடிமக்கள் சட்ட உரிமைகள்
City Compensatory Allowance	...	நகர ஈட்டுப்படி
Civic Amenities	...	நகர வசதிகள்
Civic Consciousness	...	குடிமை நல உணர்வு
Civics	...	குடிமையியல்
Civil	...	குடி முறைக்குரிய ; உரிமையியலான; படைத்துறை சாராத ; நாகரிகமான

Civil Account Code ... குடிமுறைக் கணக்கு விதித் தொகுப்பு
Civil Court ... உரிமை இயல் நீதி மன்றம்
Civil Disobedience ... சட்ட மறுப்பு
Civil Engineer ... கட்டட / கட்டுமானப் பொறியாளர்
Civil Engineering ... கட்டட / கட்டுமானப் பொறியியல்
Civil Engineering Works... குடிமுறைப் பொறியியல் பணிகள் / வேலைகள்
Civil Jurisdiction ... உரிமையியல் அதிகார எல்லை
Civil List ... அரசுப் பணியாளர் விவரப் பட்டியல்
Civil Proceedings ... உரிமை இயல் வழக்கு நடவடிக்கை
Civil Remedy ... உரிமை இயல் தீர்வழி /தீர்வு
Civil Servant ... குடிமுறை அரசுப் பணியாளர்
Civil Service ... குடிமுறை அரசுப்பணி
Civil Service Regulations ... குடிமுறை அரசுப் பணியாளர் ஒழுங்குமுறை விதிகள்
Civil Suit ... உரிமையியல் வழக்கு
Civilian ... குடிமுறை சார்ந்தவர் / படைத்துறை சாராதவர்
Claim ... உரிமைக் கோரிக்கை
Claimant ... உரிமை கோருபவர்
Claims Tribunal ... உரிமைக் கோரிக்கைத் தீர்ப்பாயம்
Classification ... வகைப்படுத்தல்
Clause ... பகுதி/ பிரிவு/ கூறு
Clear Days ... முழுமையான நாட்கள்
Clearance Certificate ... தடை நீக்கச் சான்றிதழ்
Clearance of Arrears ... நிலுவையைத் தீர்த்தல்
Clearance of Audit Objection ... தணிக்கை மறுப்புரைகளைத் தீர்த்தல்
Clemancy Petition ... கருணை மனு
Clerical Error ... எழுத்துப் பிழை

Clerical Staff ... எழுத்து அலுவலர்
Clerk ... எழுத்தர்
Client ... கட்சிக்காரர்
Climatology ... தட்பவெப்பவியல்
Clinic ... தனி / பயிற்சி மருத்துவமனை
Clinical Nutrition and Dietetics ... மருந்தகம்சார் ஊட்டச்சத்து மற்றும் உணவியல்
Clinical Pathology ... படுக்கை மருந்தகஞ்சார் நோய்க் குறியியல்/ மருந்தக நோய்க் குறியியல்
Cloak Room ... பொருள் வைப்பறை
Closet / Toilet / Lavatory ... கழிப்பிடம்
Closing Balance ... முடிவு இருப்பு
Coalition Govt. ... கூட்டணி அரசு
Coast belt ... கடலோரப் பகுதி
Coast line ... கடற்கரை ஓர எல்லைப் பகுதி
Coat of Arms ... இலச்சினை ஓவியம்
Code ... விதித் தொகுப்பு
Code number ... குறியீட்டு எண்
Code word ... குறியீட்டுச் சொல்
Codification of Law ... சட்டத் தொகுப்பு
Cognizable Offence ... பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றம்
